


மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய பாக நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி.) திருக்கடையூரில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்கார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பேசினார். உடன் பூம்புகார் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் மன்னை த.சோழராஜன், மாவட்ட கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், செம்பனார்கோயில் மத்திய ஒன்றியச் செயலாளர் அமிர்த.விஜயக்குமார், ஒன்றிய குழு முன்னாள் துணைத்தலைவர் பி.பாஸ்கர் மற்றும் பலர் உள்ளனர்.





நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. சார்பில் கழக தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நாகை அபிராமி அம்மன் திருவாசலில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணன், இளம்பேச்சாளர் தினேஷ்பாபு, நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட துணைச் செயலாளர் மு.லோகநாதன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### அமைச்சர் ஆர்.காந்தி - டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தலைமையில்

# ஆற்காடு ஒன்றிய மாணவரணி டி.மோகன்ராஜ்-பி.கீர்த்தனா மணவிழா!

## ஜெ.எல்.ஈஸ்வரப்பன் - ஆர்.ஜி.வினோத் காந்தி - ஏ.கே.சுந்தரமூர்த்தி - எம்.வி.பாண்டுரங்கன் முன்னிலை!



ஆற்காடு, ஜன. 21-

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம் - முப்பதுரெட்டி கிராமத்தைச் சேர்ந்த ஆர்.தனுஷ்கோடி - சூரியகலா ஆகியோரின் புதல்வரும் - ஆற்காடு ஒன்றியக் கழக மாணவரணி துணை அமைப்பாளருமான டி.மோகன் ராஜிக்கும், சென்னை, மேற்கு சைதாப்பேட்டையைச் சேர்ந்த தி.சி.பூங்காவனம் - சங்கரி ஆகியோரின் புதல்வி பி.கீர்த்தனாவுக்கும் மண விழா 27.1.2025 - திங்கட்கிழமை காலை 6 மணியளவில் இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, இளங்குப்பன் தெருவில் அமைந்துள்ள இந்தி ராணி ஜானகிராம முதலியார் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு 26.1.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி, ஒன்றிய முன்னாள் இணையமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழாவில் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ஆர்.ஜி.வினோத் காந்தி, ஏ.கே.சுந்தரமூர்த்தி, எம்.வி.பாண்டுரங்கன், வீ.சரவணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில் ஏ.வி.சாரதி, ஏ.வி.சரவணன், புவனேஷ்வரி சத்தியநாதன், காந்திமதி பாண்டுரங்கன், தேவி பென்ஸ்பாண்டியன், ஜெ.சண்முகம், டாக்டர் பி.என்.எஸ்.சரவணன், எஸ்.அசோக், ஸ்ரீமதி நந்தகுமார், டாக்டர் பவளக் கொடி சரவணன், ஜெ.ரமேஷ், பி.பிச்சாண்டி, எல்.தட்சணாமூர்த்தி, ஜெ.சரவணன், பி.தணிகைவேல், பி.ஜி.பத்மநாபன், ஆ.ப.கணேசன், எஸ்.வினோத், பி.ஆனந்தன், வேதா சீனிவாசன், சிவசங்கர், ஜெ.தொன்போஸ்கோ

எம்.பி.சேகர், ஜி.பண்டரிநாதன், வி.மணி, எம்.உமாமகேஷ்வரன், ரோஜா மனோகரன், பி.அன்பு, வி.கோபு, வி.தாமோதரன், பி.என்.எஸ்.ராஜசேகரன், பொன்ராஜசேகர், கே.சொக்கலிங்கம், ஏ.ஜி.ரவிக்குமார், எஸ்.ருக்மணி, ஏ.ஏ.கே.கஜேந்திரன், ஏ.ஜி.லிங்கவேஷ், ஆர்.கோபு, ஏ.சிவா, வி.விஜயகுமார், மி.கஜபதி, கே.தனிகேசன், எம்.சிவாஜி, சபியுல்லா, ஏ.ஜெ.ரமேஷ், கே.பிரபாகரன், வி.சீனிவாசன், ஜி.சாரதி, ஏ.ஜெ.குரு மூர்த்தி, பி.யுவராஜ், பி.ராம்கி, எஸ்.பிரகாஷ், ஜி.பாலாஜி, சல்மா, என்.கார்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்துகின்ற னர்.

இரா.சரண்ராஜ் நன்றி கூறுகிறார்.

# கும்பமேளாவில் பயங்கர தீ விபத்து!

## 18 கூடாரங்கள் எரிந்து சாம்பல்!

பிரயாக்ராஜ், ஜன. 21-

உபி,பிரயாக்ராஜில் 45 நாட்கள் நடைபெறும் மகா கும்பமேளா கடந்த 13ம் தேதி தொடங்கியது. தினமும் லட்சக் கணக்கான பக்தர்கள் கங்கை நதியில் புனித நீராடி வருகின்றனர். இதுவரை 7 கோடி பேர் புனித நீராடியுள்ளனர். கும்பமேளாவின் 7வது நாளான நேற்று முன்தினம் ஏராளமான பக்தர்கள் வந்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு செக்டர் 19ல் காஸ் சிலிண்டர்கள் திடீரென வெடித்து சிதறியது. இதில் 18 தற்காலிக கூடாரங் கள் தீயில் எரிந்து சாம்பலாகின. இது குறித்து தகவல் கிடைத்ததும் தீயணைப்பு துறையின் 15 வாகனங்கள் விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன.

தீயணைப்பு படையினர் உடனடியாக செயல்பட்டு தீ மேலும் பரவாமல் கட்டுப்படுத்தினர். அருகில் உள்ள கூடாரங்க ளில் இருந்தவர்கள் பலர் மீட்கப்பட்டனர்.

இதில் உயிர் சேதம் எதுவும் இல்லை என்று தீயணைப்பு துறை அதிகாரி பிரமோத் சர்மா தெரிவித்தார்.

